முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் இளைஞர் அணி நிர்வாகிகள் வெகு விமரிசையாக கொண்டாடுவீர்!

மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், ஜூன் 03;

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆலோசனை கூட்டம் பூவிருந்தவல்லி நகரத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்களான ஆர். செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், எஸ். சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் திரு வள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

அப்போது, "தமிழ் மொழி, சமூக நீதி, பகுத்தறிவு மற்றும் திராவிட இயக்கக் கொள்கைகளுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் இளைஞர் அணி சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மரக்கன்றுகள் நடுதல், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், பொது மக்களுக்கான நலத்திட்ட முகாம்கள் நடத்துதல் உள்ளிட்ட மக்கள் பயன் பெறும் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் கழக , தலைவர் அவர்களின் வழிகாட்டுதலையும் மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையில் அனைத்து பகுதிகளிலும் சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்

தொடர்ந்து பேசிய அவர், "வருகின்ற காலங்களில் இளைஞர் அணி நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அடிப்படையில் உண்மையாக உழைத்தால், உரிய பொறுப்புகளும் பதவிகளும் உங்களைத் தேடி வரும். அதற்கான வாய்ப்புகளையும் ஆதரவையும் கழகம் வழங்கும்" என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பூவிருந்தவல்லி பகுதியைச் சேர்ந்த பல்வேறு மாற்றுக் கட்சியினர், நகரச் செயலாளர் ஜி.ஆர். திருமலை மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே. சுரேஷ் குமார் நகர இளைஞர் அணி அமைப்பாளர் அ. முகமது ராஷிக் ஹனீப், ஆகியோர் ஏற்பாட்டில், மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாநில ஆதி திராவிட நலக்குழு அணி அமைப்பாளர் ஆ.கிருஷ்ண சாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி. ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மாநகர ஒன்றிய நகர பேருர் செயலாளர்கள் சன்.பிரகாஷ், ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, கே.பிரேம் ஆனந்த், தி.வை.ரவி, என். இ. கே மூர்த்தி, பொன்.விஜயன், பேபிசேகர், தி.வே.முனுசாமி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத், மாவட்ட மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், இள. ஸ்ரீதர், சதீஷ் குமார், புவனேஷ்குமார், ரங்கநாதன் மகேஷ், மற்றும் மாநகர ஒன்றிய, நகர மற்றும் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் அப்பு (எ) ஜெபராஜ், யுவராஜ், கார்த்திக், தினேஷ், டென்னிஸ்ராஜ், க.பரிமலேழகன், ஜி.பிரவீன் குமார் , சுதர்சனம், ஆர்.ராஜி, சதீஷ் , சஞ்சய் திருமலை, சத்திய, மோகன் ராஜ், மாணவர் அணி சதீஷ் பாஸ்கர், ஒன்றிய நகர பேருர் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

எஸ்.புவனேஷ் தலைமை! கொளத்தூர் கே.கங்காதரன் - பெரம்பூர் கே.கார்த்திக் ஏற்பாட்டில்

கொளத்தூர் கிழக்கு பகுதியில் அறுசுவை உணவு: பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., வழங்குகிறார்!

பிரியாராஜன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ப.ரங்கநாதன் - ஐ.சி.எப்.வ.முரளிதரன் பங்கேற்பு!

சென்னை, ஜூன். 03 -

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.புவனேஷ் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கொளத்தூர் கே.கங்காதரன், பெரம்பூர் கே.கார்த்திக் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு அன்னதானம் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி இன்று (03.06.2026 புதன்கிழமை) காலை 11:30 மணி அளவில், பெரம்பூர், லட்சுமி அம்மன் கோயில் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., கலந்து கொண்டு வழங்குகிறார்.

இதில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.ரங்கநாதன், கொளத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, ச.லட்சுமிபதி, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார் எம்.சி, எஸ்.தனசேகர், கே.பிரசாத், ஸ்ரீதனி, ஆர்.ராஜன், பி.பழனி, எஸ்.டி.பாஸ்கார், க. விஜயரங்கம், ஜி.ராமகிருஷ்ணன், வி.அறிவரசு, எஸ்.நசீர், லட்சுமி முருகேசன், கோ. கோ.மணிமாறன், எச்.எல்.சத்தியா, வி.அரிகுமார், என்.ஆர். குமார், பெ.சேகர், ஜி.மணி, டி.மோகன், பி.பிரபாகரன், ஜெ.பி.கணேஷ், சொ.பழனி, துளசி குருபரன், என்.வேலன், எஸ்.டி.சீனிவாசன், எஸ்.சுகுமார், பாலு சதீஷ், கௌரி குருபரன், ஜெ.வரலட்சுமி, அனிதா, மேரி,அனுசுயா, ஜீவரேகா, எஸ். வளர்மதி, பி.வசந்தா, எம்.சந்தானம், எ.வினோத், இரா.விஜய், ஜெ.ராஜப்பா, வி.டில்லிராஜ், ஆர்.மணிகண்டன், உ.விக்னேஷ், எஸ்.தணிகைவேல், OMG எஸ்.ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நே.சிற்றரசு, அன்பகம் கலை – தயாநிதி மாறன், மருத்துவர் எழிலன் நாகநாதன் முன்னிலை!

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதியில் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு!

ஆர்.எஸ்.பாரதி உணவு வழங்குகிறார்! பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 3-

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிங்க தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞரணி செயலாளர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் தமிழ்நாட்டின் நவீன சிற்பி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு 306 2026 புதன்கிழமை அன்று மதியம் : 12:00 மணிக்கு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி கழக செயலாளர் மா.பா.அன்பு துரை தலைமையில் பொதுமக்கள் 1000 பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்கள் உணவு வழங்குகிறார் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசுகழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், மாநில நிர்வாகிகள் வழக்கறிஞர் கே. ஜே.சரவணன், அழகிரி சதாசிவம், எஸ்.எம்.கே.அண்ணாதுரை மாவட்ட கழக நிர்வாகிகள் து. விக்டர் ஆர்.என். துரை வி.எஸ்.கலைச்செல்வன் சங்கீதா ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.நற்குணநாதன், பா. இராபர்ட், வெற்றிச்செல்வி மாணிக்கம், ஆகியோர் பங்கேற்கிறார்கள்

பகுதி கழக நிர்வாகிகள் எம்.ஆர். ஜம்புலிங்கம், கோ. ரவி ,மு.வெங்கடேசன், டி. வைலட்மேரி, எம்.ஜெயக்குமார், வட்டக் கழக செயலாளர் எஸ்சத்திய பெருமாள், தேனா எல்.தவமணி, ஆர்.பாபு, எஃப்.பீட்டர் ஜான், நுங்கை. மகேஷ், த.தேவராஜ், எம்.என். விஷ்ணு, கோ.யுவராஜ், எஸ். என்.கே.ராமன், மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பா.பிரகாஷ்,துபாய் வி.ஆர்.விஜய், திருமலை பொன்னுரங்கம், டி.கே லதா பிளாரன்ஸ், எஸ். செந்தில் குமார், மெய்.சரவணன் மாமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.நந்தினி மல்லிகா யுவராஜ் மாவட்ட பிரதிநிதிகள் ஜான் டிசில்வா, ஏ.வி.இராமதாதன், ஜெ.வரதராஜன், ஏ.கண்ணன், கே.வேல்முருகன், பாட்ஷா பாபு, கே.சிவலிங்கம் கே.பி.வினோத், எஸ்.குணசேகரன், அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜே.எம்.எச்.இம்ரான், என்.மோகன் வேல், பிரசன்னா ராஜகுமாரி, சுலோக்சனா ராமு, கு.பச்சையம்மாள், கே ரேணுகா ந.அங்காளம் பி.பரமேஸ்வரி, சத்திய பிரியா, கி. தம்பிதுரை, டி.டி.பாபு, நா. அசோகன், ரகுராமன், ஜே.பி. ரவிவர்மன், மெய்.சண்முகம் பழக்கடைஆறுமுகம், மு. பாண்டியன்,தா.ஜெயக்குமார், செ.புவான் ராஜ், கே. அசோக் குமார், எஸ்.ரமேஷ், ஜே.எம். சங்கரலிங்கம், சி.எஸ்.ஆர். சந்தோஷ் தா.டேனியல் ஏஜாஸ் அலிகான், தா.விநாயகம், தமிழ், தவசீலன், வி.ஆனந்தகுமார், ஸ்ரீராம், தி.ஆனந்தன்,கே. குமார் ஹாக்கி சதீஷ் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஜெ.ஏ.புவனேஷ் ஸ்ரீ வட்சன், வீ தனசேகர், வழக்கறிஞர் சுரேஷ், எஸ்.ஆனந்தி, இ.சத்தியா, சி.மூர்த்தி, எஸ். பிரேம்குமார், ஜி.மாணிக்கம், நடேசமூர்த்தி, துரைராஜ், எஸ் பிரதீப்,தரணி குமார் எம்.செல்வக்குமார், டி.கே.ரமேஷ், தட்சிணாமூர்த்தி, டி.அரி மருத்துவர் ஸ்ரீராம், வி.ஜெகதீஷன், பி.கோபிகிருஷ்ணன் எஸ்.செந்தில் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் மா. பா.அன்புதுரை கேட்டுக் கொண்டுள்ளார்.

கோ.யுவராஜ் தலைமை! மா.பா.அன்புதுரை - மல்லிகா யுவராஜ் எம்.சி. முன்னிலை!

ஆயிரம்விளக்கு 118 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக கொடியேற்றி அறுசுவை உணவு!

அன்பகம் கலை - நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - நா.எழிலன் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன். 03

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 பிறந்தநாள் விழா முன்னிட்டு இன்று (03.06.2026 புதன்கிழமை) காலை 10.00 மணியளவில், பி.வி.கோயில், 2 வது தெருவில் உள்ள கிளை கழகத்தில் கழகக் கொடியினை ஏற்றி, அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கௌடியா மடம் சாலை, தோமையப்பன் தெரு ஆட்டோ நிறுத்தம் அருகில் கழகக் கொடியினை ஏற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் தலைமை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, 118 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ், ம.ஜெயக்குமார், ப.வினோத்குமார், கே.கோதா, ஏ.வி.ராமநாதன், ஜெ.மதுராயி, சு.ஆடலரசன், எஸ்.நாராயணபாபு, எம்.சங்கரலிங்கம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ம.வேலுமணி, சாந்திபரந்தாமன், எஸ்.ரமேஷ், எம். காசி, கே.தியாகராஜன், பி.திருத்தணி, டி.பிரபா, எஸ். சேகர், இ.கன்னியப்பன், எஸ்.செந்தில், கு.தீபன்சக்கரவர்த்தி, கா.சங்கீதா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் துவக்கி வைத்து கழக கொடியேற்றி, அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ஆர். வி.சௌந்தர், கே.பி.ஜெயராமன், கு.கார்த்திக், ஜி.சம்பத்குமார், போட்டோ சுரேஷ், என்.அருண்குமார், ஏ.சரவணன், டி.ஜான்சன், எஸ். பழனி, எஸ்.பாஸ்கர், ஜெ. கண்ணன், வி.வி.மணி, தன லட்சுமி, ஏ.செந்தில், ஜெ. பெருமாள், கே.நடராஜன், ஏ.அனந்த கிருஷ்ணன், தனுஷ், ஏ.ராஜ்குமார், டி. கௌதம், எஸ்.கிஷோர், ஜீவ கன், ஷாம் மற்றும் பாக முக வர்கள், இளைஞர் அணி தம் பிமார்கள், மகளிர் அணி நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்து தருமாறு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ. யுவராஜ் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாளையொட்டி – தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகத்தில்

பேரவை கொடியேற்றி இனிப்பு வழங்கி 1000 பேருக்கு அறுசுவை உணவு!

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 3-

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 03.06.2026 அன்று பகல் 12.00 மணியளவில் தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான "கலைஞரகத்தில்" பேரவைக் கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் நண்பகல் 12 மணி அளவில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள், இணைப்புச் சங்க நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்று வோம். நமது கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணை யை ஏற்று கழகப் பணி களப் பணியாற்றிட உறுதியேற்போம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா: கொடியேற்றி அறுசுவை உணவு - நே.சிற்றரசு வழங்குகிறார்!

பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜூன். 03

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. சார்பில் பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமையில் இன்று (03.06.2026 புதன் கிழமை) காலை 11.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவல்லிக்கேணி பகுதியில் கழகக் கொடியேற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார்.

இன்று (03.06.2026 புதன்கிழமை) கொடி ஏற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் 115 (அ) வட்ட ம் சோகத்தாவுத் தெரு, வட்டச் செயலாளர் கே. ஜி.செந்தில்குமார், 116 வது வட்டம் அயோத்தியா நகர் கொடியேற்றுதல் மற்றும் இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல் வட்டச்செயலாளர் எஸ்.சசிகுமார், 116 (அ) வட்டம் பி.வி.நாயக்கன் தெரு, கொடியேற்றுதல் இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல் வட்டச் செயலாளர் ஜெ. விஜயகுமார், 119 வது வட்டம், கொடியேற்றுதல் மற்றும் இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல் மீர்சாகிப்பேட்டை மார்கெட் வட்டச் செயலாளர் க.வே.மோகன், 119 (அ) வட்டம், வி.எம்.தெரு, பெரியார் சிலை அருகில் கொடியேற்றுதல் மற்றும் இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல் வட்டச் செயலாளர் கே.பிரபு, 120 வது வட்டம் முத்தையா தெரு, கொடியேற்றுதல் இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல் வட்டச்செயலாளர் ஐ.சி.எப்.எம்.சங்கர், 120 (அ) வட்டம் வி.ஆர்.பிள்ளை தெரு, கொடியேற்றுதல் இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல் வட்டச் செயலாளர் என்.ரவி, 120 (அ) வட்டம் நடுகுப்பம் கொடியேற்றுதல் இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல் மீனவர் அணி மாவட்ட தலைவர் ஜெ.கதிரேசன், 115 (அ) வட்டம் சென்னை மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பாக ஏ.விஜயராஜ் ஏற்பாட்டில் கொடியேற்றுதல் இனிப்பு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் வீ.பி. பொன்னரசு, ஆர்.என்.துரை, ஆர்.சுபேர்கான், வி.என். ராஜன், ப.பிரகாஷ், ஏ. விஜயராஜ், இ.இளம்பாரதி, வே.கமலா செழியன், ரவி. ராஜ்குமார், எம்.கே.ஆனந்த், ம.தயாநிதி, கே.திருநாவுக்கரசு, சி.தினகரன், ரா.பத்மாவதி, எம்.பிரேம்ராஜா, எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், க.வே. மோகன், என்.ரவி, கே.பிரபு, கே.ஜி.செந்தில்குமார், எஸ். சசிக்குமார், எம்.கலில்ரகுமான், ஆர்.சசிகுமார், வெ. சீனிவாசன், ஆர்.கஜேந்திரன், எஸ்.விஜயக்குமார், ஏ.பி. வேலு, ஆர்.ராஜ்குமார், வி.தினேஷ்குமார், மங்கை ராஜ்குமார் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள மாறு கோட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ. ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. தெரிவித்துள்ளார்.

நேதாஜி யு.கணேசன் தலைமை!

38வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! 1000 நபர்களுக்கு சிற்றுண்டி !

ஆர்.டி.சேகர் வழங்குகிறார்! கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் – எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு!

சென்னை, ஜூன்.03

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வட்டத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் வட்ட கழக செயலாளரும் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் எம்.சி, தலைமையில் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்படுகிறது.

இன்று (03.06.2026 புதன்கிழமை) காலை 8.00 மணியளவில் நேதாஜி நகர் மெயின் தெரு உள்ள நேதாஜி சிலை அருகில் பகுதியில் உள்ள பொது மக்கள் சுமார் 1000 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் உணவு வழங்குகிறார்.

ஆர்.கே.நகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர், மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக அமைப்பாளர்கள் மன்ற நிர்வாகிகள் கழக செயல்வீரர்கள் வீராங்கனைகள் கழகத் தோழர்கள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச்செயலாளர் நேதாஜி யு.கணேசன் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா !

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் கழகக் கொடியேற்றி நல உதவிகள்!

ஒன்றிய செயலாளர் படப்பை ஆ. மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன் 3

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் கிளைகள் தோறும் கழகக் கொடி ஏற்றி தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள் அனைத்து ஊராட்சிகளிலும் நல உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கிளைக் கழக வார்டு செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு படப்பை ஆ. மனோகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!

63 அ வட்டத்தில் கழகக் கொடியேற்றி - 500 பேருக்கு உணவு!

எஸ்.மதன்மோகன் – டி.தொப்பளான்குமார் – மு.சின்னராஜ் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 3

63(அ) வட்ட தி.மு.க. சார்பில் இன்று (3.6.2026) காலை 11 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டத்தில் உள்ள தெருக்கள் ஜி.பி. சாலை (ரோமக்ஸ் ஓட்டல்), பூபேசம் 3-வது தெரு, வெங்கடேசன் தெரு, புக்ரா தெரு, வி.என்.தாஸ் சாலை, எல்.ஜி.என். சாலை (குடிசை பகுதி) ஆகிய தெருக்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட உள்ளன. இதில் பகுதிச் செயலாளர் மதன் மோகன் கொடியேற்ற உள்ளார்.

வட்டக் கழக துணை செயலாளர் டி.தொப்பளான் குமார் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளார்.

இதில் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

'கலைஞர்' எனும் சொல்!

கருப்பு சிவப்புக் கொடியில்
கலந்திருக்கும் உயிர்.
திராவிடத் தோட்டத்தில்
தமிழ் விளைவிக்கும் பயிர்!

'கலைஞர்' எனும் சொல்
விரோதிகளை வெல்லும் படையணி;
துரோகங்களின்
துயர் நீக்கும் நிவாரணி!

'கலைஞர்' எனும் சொல்
அண்ணா அறிவாலய
அரசியல் ஆய்வகம்;
காலத்தை வெல்லும்
கருத்தியல் கருவூலம்;
நேர்வழியைப் பயிற்றுவிக்கும்
நூற்றாண்டு நூலகம்!

முத்தமிழறிஞரே!
உன் பெயரை உச்சரித்தால்
உற்சாகம் பிறக்கிறது;
உள்ளத்தில், உடல் மொழியில்
ஒரு கம்பீரம் கிடைக்கிறது.

உன்
உதயநாளில்தான்
தமிழ் உலகின்
கீழ்வானம் சிவந்தது:
உன் அரசியலால் தான்
இந்தியா முழுவதும்
திராவிட வெளிச்சம் பாய்ந்தது.
நெருக்கடி நிலையிலும்
சுவாசிக்கும் காற்றோடு
சுயமரியாதைக் காற்றையும்
காப்பாற்றி வைத்திருந்தாய்.

நீண்ட நெடிய எங்கள்
பயணத்திற்கு
வரைபடம் வழங்கியுள்ளாய்.

வரலாற்றில் ஒரு புரூட்டஸ் உன்
வாழ்க்கையில் பலநூறு புரூட்டஸ்கள்!

நெஞ்சில் பொறுக்காத துயரங்களில்
நெஞ்சுக்கு நீதிதான் மருந்து போடுகிறது.

வெற்றியும் தோல்வியும்
ஒற்றைநாள் செய்தி என்றே
கற்றுக் கொடுத்திருக்கிறாய்!

விழுந்த வேகத்தில்
எழுந்து நிற்கும்
வித்தையை
பயிற்றுவித்துள்ளாய்.

நெருப்பில் முளைத்தெழுகின்ற
'ஃபீனிக்ஸ்' பயிற்சி
வழங்கியுள்ளாய்.

மாபெரும் தலைவர்,
மனிதநேயர் கழகத்
தாயுமானவர்
தலைவர் தலைமையில்
சின்னவர் வழிநடத்தும்
பாசறை இளைஞர் படை
முன்னணி நடைபோட
தமிழகம் மீட்போம்;
தன்மானம் காப்போம்;
உன் மீது ஆணை!

அறந்தாங்கி வெங்கடேசன்
வழக்கறிஞர்